மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : வேளாண்மைத் துறையின் நில வள—நீர்வளப் பாதுகாப்பு வேலைத் திட்டத்தின் கீழ், உயரமான தடை அணைக்கட்டுகள் எதுவும் கட்டப்படுவதில்லை. நடுத்தர உயரமுள்ள குறைந்த உயரமுள்ள, தடை அணைக்கட்டுகளே கட்டப்படுகின்றன. பெருந்தடை அணைக்கட்டுகள் என வழங்கப்படுகிற இடைத்தர உயரமுள்ள தடை அணைக் கட்டுகள் எட்டு, 1962 முதல் 1966 வரை மண்வளப் பாதுகாப்பு வேலைத் திட்டத்தின் பகுதியாக வட ஆர்க்காடு மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ளன.

தேவையானபோது, இத்தகைய அணைக்கட்டுகள் இம்மாநிலத்தில் ஏனைய பகுதிகளில் கட்ட எண்ணியுள்ளது.

Colachel–Neerodi Coastal Road

* 175 *Q.*—THIRU A. CHIDAMBARANATHA NADAR : Will the Hon. the Minister for Agriculture be pleased to state —

(*a*) whether there is any proposal under the consideration of the Government to construct a coastal road from Simon colony at Colachel to Neerodi ; and

(*b*) if so, the width of the proposed road ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) & (இ) கொளச்சலி லிருந்து நீரோடை வரை கடலோரச் சாலை அமைப்பதற்கு 1960-ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, பின்னர் ஒத்திவைக்கப்பட்டது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சார், இது ஒரு முக்கியமான வழித் தடமாக இருக்கிற காரணத்தால் மறுபடியும் புனர்பரிசீலனை செய்து, இதைச் செய்ய ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : 1960-ல் இதற்கு முதல் எஸ்டி மேட் போடும்போது 5 லட்சம் 91 ஆயிரம் செலவில் திட்டமிட்டது. அதன் பிறகு இரண்டாவது ரிவைஸ்ட் எஸ்டிமேட்டில் 17 லட்சமாக உயர்ந்த காரணத்தால் அன்றிருந்த நிதி நிலையில் அது சாத்தியம் இல்லையென்று தள்ளிவிட்டார்கள். அங்கத்தினர் கூறுகின்ற நிலையில் மீண்டும் அதைப் புனர் பரிசீலனை செய்வதற்கு யோசிக்கலாம்.

திரு. வ. ஜார்ஜ் : இந்தத் திட்டம் நேஷனல் ஹைவேஸ் திட்டத்தின் கீழ் ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசு ஒப்புதலுக்கு உட்பட்டுத் தொடங்கிய ஒன்று என்று நினைக்கிறேன். பிறகு இதை விட்ட காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : உணவு உற்பத்தித் திட்டத் தின் கீழ் இந்த ஏற்பாடு எடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டேன். ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இருக்கும் என்று ஊகித்துச் சொல்வது சரி அல்ல.

Kotagiri as Tourist Centre

* 176 *Q.*—THIRU K. VINAYAKAM, THIRU J. BELLIE GOWDER } : Will the Hon. the Minister for Harijan Welfare and Informa-tion be pleased to state—

(*a*) whether there is a proposal to promote and develop Kotagiri in the Nilgiris district as a tourist centre ; and

(*b*) if so, the steps taken by the Government to develop the area ?